**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 08 /2019**

பிரதிவாதி தரப்பு சாட்சியாக DW. 2 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவக்குமார் | Father Name | : | ரெங்கசாமி |
| Village | : | கோவில்பத்து | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கம்பி பிட்டர் |
| Religion | : | | Age | : | 44 |

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எந்த சம்மனும் வரவில்லை என்றால் சரிதான். எனக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் மாமா முறை என்றால் சரியல்ல. நான் அவர்களது ஊர்காரர் மட்டும்தான். இவ்வழக்கு பற்றிய விபரங்களை எனக்கு யார் கூறினார்கள் என்றால் யாரும் கூறவில்லை நானாகவே சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் வழக்கு எண், நீதிமன்றத்தின் பெயர், வாய்தா தேதி குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் தாவா சொத்துக்கள் எத்தனை அட்டவணை சொத்துக்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரோட்டுக்கு தென்புறமாக தாவா சொத்து உள்ளது என்று எனது நிரூபன வாக்குமூலத்தில் கூறியுள்ளதில் ரோட்டின் சர்வே எண் என்ன என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா

சொத்துக்களுக்கு தென்புறம்தான் பிரதிவாதிகள் குடியிருப்பதாக நான் எனது நிரூபன வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் வழக்கறிஞரிடம் விபரம் கூறினேன் கையொப்பத்தை எனது வீட்டில் வந்து பெற்றுக்கொண்டார்கள். வழக்கறிஞரும் 3ம் பிரதிவாதி குருமூர்த்தியும் எனது வீட்டில் வந்து எனது கையொப்பத்தை பெற்றுக்கொண்டார்கள். நான் எனது நிரூபன வாக்குமூலத்தில், "வழக்கில் கண்டுள்ள சொத்து அதாவது ரோட்டுக்கு அடுத்து தென்புறத்தில் உள்ள பகுதி முழுவதும் திருஞானசம்பந்தம் வகையராவால் அனுபவம் செய்து வரப்பட்டுள்ள சொத்து ஆகும். மேற்படி சொத்து பகுதியில் வண்டிமாடு வைத்தும் வைக்கோல் போர் போட்டும் அனுபவம் செய்து வந்தனர். ஒரு பகுதியில் சோமு மகள் விமலா என்பவர் குடியிருந்து அனுபவம் செய்து வந்தார். எனக்கு தெரிந்து சுமார் 35 வருடமாக மேற்படி இடத்தினை திருஞானசம்பந்தமூர்த்தி வகையரா அனுபவம் செய்து வந்தது எனக்கு நேரடியாக தெரியும்", என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது நிரூபன வாக்குமூலத்தில், "அன்னை பிரகாஷ் வீடுகட்டும் போது அதன் கட்டுமான பொருட்களை தளவாட சாமான்களை வைத்துக்கொள்வதற்கு கூட ராமமூர்த்தியிடம் அனுமதி வாங்கிதான் ரோட்டுக்கு அடுத்து தென்புறம் உள்ள பகுதியினை அன்னை பிரகாஷ் பயன்படுத்தி வந்தார். அதுவரைக்கும் எனக்கு தெரியும். கட்டிட வேலை முடிந்ததும் அன்னை பிரகாஷ் மேற்படி இடத்தை உரிமை இருப்பதாக சொல்லி பிரச்சனை செய்து வருவதால் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது" என்று கூறியுள்ள விபரங்களும் பொய்யானது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதிகளின் உரிமையிலும் அனுபவத்திலும்தான் இருந்துவருகிறது என்றும் நான் பிரதிவாதிகளின்

உறவினர்கள் என்பதால் பிரதிவாதிகளின் சொல்லிக்கொடுத்ததின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருப்பதனால் நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை அதற்கு வாய்ப்பும் இல்லை என்றால் சரியல்ல. அன்னைபிரகாஷ் வகையரா ரோட்டுக்கு தென்புறம் உள்ள பகுதியினை எந்த வகையிலும் அனுபவம் செய்தது கிடையாது என்று கூறியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. 1ம் முதல் 4 பிரதிவாதிகள் எனது மாமா முறை என்றாலும் அதை ஒப்புக்கொண்டால் எனது சாட்சியம் கேள்விக்குறியாகும் என்பதால் உறவை மறைத்து அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.09.23 16:27:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.